II ADDITIONAL DISTRICT AND SESSIONS COURT,
THIRUVALLUR AT POONAMALLEE

**O.S.No. 41/2024**

Deposition of witness for the Plaintiff/PW 1
solemnly by Thiru.A.Manikandan, Junior Assistant
in accordance with the provision of Act I for 1873 on 08.04.2026

| | | | | | |
|---|---|---|---|---|---|
| Name | : | Jeevarathinam | Age | : | |
| Father's / Husband's Name | : | | Village | : | |
| Taluk | : | | Distict | : | |

<u>1, 5, 6 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை</u>–

வழக்கு 1ம் அட்டவணை சொத்து சோளிங்கபுரம் பொன்னை கிராமத்தில் உள்ளது. அது 4521 சதுர அடி விஸ்திரணம் கொண்ட காலி இடம் ஆகும். அது இன்னும் என் தந்தை பெயரில் தான் உள்ளது. 2ம் அட்டவணை சொத்து சென்னை கொளத்தூர் அண்ணா நகரில் உள்ளது. அது 2400 சதுர அடி விஸ்தீரணம் கொண்டது. அதில் என் தந்தை 400 சதுர அடியில் வீடு கட்டினார். அவரது காலத்திற்கு பிறகு எனது சகோதரர் ஜானகிராமன் 600 சதுர அடியில் மூன்று மாடி வீடு கட்டியுள்ளார். எனது சகோதரிகள் ராஜகுமாரி மற்றும் ஷீலா ஆகியோர் 240 சதுர அடியில் வீடு கட்டியும், 300 சதுர அடியை ஆக்கிரமித்துள்ளனர். எனது தந்தை கட்டிய வீட்டில் நான் குடியிருக்கிறேன். மேற்கண்டவர்ளுக்குரிய பாகங்களை கொடுக்க எனக்கு ஆட்சேபனை இல்லையா என்றால் ஆட்சேபனை உள்ளது. எனக்கு முன்புறம் இடம் வரவேண்டும். வழக்கு சொத்து என் தந்தையின் சுய வருமான சொத்தாகும். என் தந்தை என்னை படிக்க வைத்துவேலைக்கு சேர்த்துவிட்டார் என்றால் எங்கள் மூன்று பேரை படிக்க வைத்து வேலைக்கு சேர்த்துவிட்டார். நான் வழக்கு சொத்துக்களில் 1/8 பாகம்

கோரியுள்ளேன். 8 பேரும் வழக்கு சொத்துகளில் குடியிருகிறோமா என்றால் இல்லை. நான், ஷிலா, ராஜகுமாரி, ஜனகிராமன் ஆகியோர் வழக்கு 2ம் அட்டவணை சொத்தில்குடியிருக்கிறோம். 7, 8 பிரதிவாதிகள் எனது இறந்துவிட்ட அக்காள் புஷ்பாவின் குழந்தைகள் ஆவர். 1, 5, 6 பிரதிவாதிகளுக்கு வழக்கு சொத்துகளில் தலா 1/8 பாகம் கிடைக்க எனக்கு ஆட்சேபனை உள்ளதா என்றால் ஆட்சேபனை இல்லை.

3 மற்றும் 4 பிரதிவாதிகள் தரப்பில் மேற்கண்ட குறுக்கு விசாரணை–

3 மற்றும் 4 பிரதிவாதிகளுக்கு வழக்கு சொத்துகளில் தலா 1/8 பாகம் கிடைக்க எனக்கு ஆட்சேபனை உள்ளதா என்றால் ஆட்சேபனை இல்லை.

(2ம் பிரதிவாதி தரப்பு வழக்கறிஞர் வேண்டுகோளுக்கிணங்க குறுக்கு விசாரணைக்காக சாட்சி விசாரணை ஒத்திவைக்கப்படுகிறது)